ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

===========================================================================

# *புறநானூற்றுப் போற்றிப் பாடல்களில் மன்னனுக்குரிய உவமைகள்*

===========================================================================

**ஆய்வாளர்**
***சா. யாகானா***
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*தரமணி, சென்னை – 113.*

===========================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*உவமை என்பது பாடலுக்கு நயத்தை (சுவையை) உண்டாக்கி அப்பாடலுக்கு வலிமை சேர்க்கக்கூடிய ஒன்றாகச் செயல்படுவதாகும். ஒரு பாடலில் உவமை, உருவகம், அணி போன்றவை இல்லையெனில் அப்பாடல் வெறுமையற்றதாய் தோன்றும். ஆதலால்தான் உவமை என்பதை இலக்கியங்களில் குறிப்பாக மன்னர்களைப் போற்றும் போது ஆசிரியர் கையாண்டுள்ளனர். அவை அம்மன்னனின் செயல்பாட்டைப் பொறுத்தே இடம், பொருள் கொண்டு அமைகின்றது. பாடாண்திணையில் கூறக்கூடிய பதினான்கு துறைகளில் இயன்மொழி வாழ்த்து என்னும் துறையை மையமாகக் கொண்டு கீழ்வரும் கட்டுரை விளக்குகிறது.*

**முன்னுரை**

*சங்க இலக்கியங்கள் உவமைகளால் சிறப்பு பெற்றவையாகும். அவற்றில் தலைவன் பற்றிய பாடல்களில் வரும் உவமை ஒப்பீடுகள் இலக்கியங்களில் அதிகம் காணப்படுகின்றன. அக நூல்களில் தலைவனைப் பற்றி உவமை கூறுமிடங்கள் பெரும்பாலும் உள்ளுறை, இறைச்சி போன்ற உட்கூறுகளைக் கொண்டே அமைகின்றன. ஏனெனில் தலைவன் பரத்தையரிடம் செல்லும்போது அவனுடைய குறைகளைச் சுட்டிச் செல்லவே விலங்குகளையும், பறவைகளையும் புலவர்கள் தங்கள் பாடல்களில் கையாண்டுள்ளனர். மேலும், இது போன்ற சான்றுகள் படிப்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் அமையும் என்பதாகவும் இருக்கலாம். ஆனால், புற நூல்களில் அரசர்களைப் பற்றி பாடுமிடங்கள் முற்றிலும் வேறுபட்டதாக அமைவதைக் காணலாம். அதாவது, அரசனுடைய வீரம், புகழ், கொடை, வலிமை போன்ற தன்மைகளைப் புகழ்ந்துப் பாடுவதாக அமைவதைக் காணலாம். புறநானூற்றுப் பாடல்களில் மன்ன னின் வீரத்திற்கானச் செயல்களை எடுத்துரைக்கையில் எவ்வகையான உவமைகளைக் கொண்டு புலவர்கள் போற்றியுள்ளனர் என்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.*

**போற்றிப்பாடல் விளக்கம்**

*தமிழில் இலக்கியங்கள் மட்டுமல்லாமல் காப்பியங்கள், புராணங்கள் போன்ற படைப்புகள் ஏதாவது ஒரு மையக் கருத்தின் அடிப்படையிலேயே பாடல்கள் புனையப்படுகின்றன. போற்றிப்பாடல் என்பது (தெய்வம், அரசன், நாடு, நகர் , இயற்கை) போன்றவற்றைப் பற்றிப் போற்றிப் பாடுவதாகும். போற்றுதல் என்பதற்கு ஆங்கிலத்தில் 'Panegyric, Ode' போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, "பாராட்டுதல், புகழ்தல், தியாகி என்று அனைவராலும் போற்றப்பட்டவர், நாடு போற்றும் உத்தமர், ஒன்றை அல்லது ஒருவரை உயர்வாக மதித்தல் அல்லது கருதுதல் எனப் போற்றி என்பதற்கு விளக்கம் அளிக்கின்றது. இப்பொருண்மையையொட்டியே, "புகழ்ந்து பேசு, நற்குணங்களைப் பாராட்டு என ஆக்ஸ்போர்டு அகராதியும் விளக்கம் தருகின்றது.*

***உவமை வரையறை***

*உவமை என்பது கவிஞனின் பாடலை (கவிதையை) மேம்படுத்தி அழகூட்டுவதாகும் . கவிஞன் தான் எடுத்துக்கொண்ட பொருளைக் கூற முற்படும்போது அப்பொருளுக்கு மேலும் சுவையூட்ட (உலகிற்கு) எல்லோருக்கும் தெரிந்த ஒரு சொல்லினை அப்பொருளோடு ஒப்புமைப்படுத்தி விளக்கிக் கூறுவதைத் தான் உவமை என்கிறோம். உவமையைப் பற்றி, தமிழண்ணல் கூறுகையில், "படைப்பாளியின் ஆற்றலை வெளிப்படுத்தும் இலக்கிய உத்திகளுள் உவமை சிறப்பிடம் பெறுகிறது. உவமைகள் இலக்கியப் புலவனின் படைப்பாற்றலையும், கூர்ந்து நோக்கும் பார்வையையும் சமுதாயச் சூழலின் செல்வாக்கையும் நன்கு உணர்த்துவது" என்கிறார்.*

***புறப்பாட்டில் மன்னனின் உவமைகள்***

*சங்க இலக்கியத்தில் தமிழர்களின் வீரத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் விதமாக இருப்பதுதான் புறத்திணையியலில் கூறும் பாடாண் திணையாகும். பாடாண்திணை என்பது ஒரு அரசனைப் புகழ்தல், அல்லது அவனை ஒத்த வேறு அரசனைப் புகழ்தல் என்பதாகும். அவ்வாறு, புகழ்ந்து கூறும்போது அவர்களின் ஒழுகலாறுகளாகக் கருதப்படும் கல்வி, தறுகண், இசைமை, கொடை என்பவையாகும். இவற்றில் (மனைவாழ்க்கை, வீரம்) குற்றமற சிறந்து விளங்குபவர்களையே புலவர்கள் நல்ல குணங்களை உடையவர்கள் எனப் போற்றியுள்ளார்கள். பாடாந்திணைப் பற்றிக் கூறுகையில், "அளவால் நீண்ட பாடாண்திணைப் பாடல்களாக விளங்கும் ஆற்றுப்படை நூலகளில் மன்னனே வாழ்த்தப்பட்டிருப்பதும், பின்னர் மன்னனை வாழ்த்தும் வாழ்த்திற்குப் பதிலாகக் கடவுளை வாழ்த்தும் வாழ்த்து திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்றிருப்பதும் காலமுறை வளர்ச்சியே எனலாம்" என்று புலவர் குழந்தை அவர்கள் கூறியுள்ளார். மேலும், "அரசர்களே பாடாண்திணையில் தெய்வமாக உயர்த்திப் பாடப்படுவர்" என்று அ.கி.நாயுடு கருதுகின்றார். மேற்கூறிய கருத்துக்களைப் பார்த்தோமானால், தொல்காப்பியர் பாடாண்திணையில் சுட்டும் கடவுள் வாழ்த்து என்பது, புலவர்கள் மன்னனைக் கடவுள் நிலைக்கு உயர்த்தி, வாழ்த்திப் பாடுவதைக் கூறுவதாகும்.*

*புறநானூற்றிலுள்ள பாடாண்திணையில் மன்னனை வாழ்த்திப் பாடுவதாக, [பூவைநிலை, வாழ்த்தியல், இயன்மொழி, கடைநிலை, பரிசில் விடை, செவியறிவுறூஉ, புலவராற்றுப்படை, உடனிலை, குடைமங்கலம், விறலியாற்றுப்படை, பாணாற்றுப்படை, வாள் மங்கலம், பரிசில் கடாநிலை, பரிசில்துறை] ஆகிய பதினான்கு துறைகளை ஆசிரியர் கூறியுள்ளார். இவற்றில் மன்னன் கொடை அளிப்பதைப் பற்றிக் கூறும் இயன்மொழி வாழ்த்து என்னும் துறைதான் பாடாண்திணையில் அதிகமான பாடல்களைக் கொண்டு அமைவதைக் காணலாம். பதிற்றுப்பத்தில் [பாடாண்பாட்டு, செந்துறை, பரிசில்துறை, இயன்மொழி வாழ்த்து, நாடுவாழ்த்து, பெருஞ்சோற்றுநிலை, களவழி] ஆகிய துறைகளின் அடிப்படையில் போற்றப்படுவதைக் காணலாம். இவற்றில் பாடாண்பாட்டில் அமைந்த செந்துறையில் மன்னர்களின் ஒழுகலாறுகளைப் புகழ்ந்து கூறுவதாக அதிகமான பாடல்கள் அமைவதைக் காணலாம். மற்ற துறைகளில் சிறுபான்மையான பாடல்களே*

பாடப்பட்டுள்ளன. வாகைத்துறையில் அரசனுடைய வெற்றியின் சிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் போது, [அரசவாகை, இயன்மொழி, ஏறாண்முல்லை, வல்லாண்முல்லை, மறக்களவழி] ஆகிய துறைகளைக் கொண்டே புகழ்ந்து கூறியுள்ளதைப் பார்க்க முடிகிறது. இங்கு கூறப்பட்டுள்ள துறைகள் அனைத்திலுமே மன்னனுடைய கொடை, குடிப்பிறப்பு, வலிமை, கொற்றம், நாடு கைப்பற்றுதல், பிறர் நாட்டை அழித்தல், மக்களை ஆதரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியே அமைவதைக் காண்லாம். இங்கு கூறப்பட்டுள்ள பொருண்மைகள் அனைத்துமே 'வீரம்' என்ற சொல்லுக்குள் அடக்கிப் புலவர்கள் பாராட்டி உள்ளதை நம்மால் அறிய முடிகின்றது. புற நூல்களில் மன்னர்களைப் புகழ்ந்து பாராட்டுபோது எவ்வகையான உவமைகளைக் கையாண்டுள்ளார்கள் என்பதைக் கீழ்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

**நாட்டைக் காக்கும் தன்மை**

புலவர்களின் உவமைத் திறனை விளக்கும் விதமாக தாய்க்கும் குழந்தைக்குமான உறவினைப் பற்றிக் கூறும் பாடல் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. ஒரு தாய் தன் குழந்தையைப் பேணி பாதுகாப்பது போல் தன் நாட்டு மக்களை மன்னன் பாதுகாக்க வேண்டுமென்பதை,

"காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி" (புறம்.5)

சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறைக்கு அறிவுரை கூறும் விதமாக நரிவெரூஉத்தலையார் பாடியதாகும். மேலும், அதியமான் எழினி தகடூரில் நிகழ்ந்த போரில் இறந்த நிலையில் அவனுடைய சுற்றத்தைக் குழந்தையைப் பேணிப் பாதுகாப்பது போன்று பாதுகாக்க வேண்டுமென்பதை (புறம்.430) பாடலில் அரிசில்கிழார் கூறுகிறார்.

**இல்லாத நிலையிலும் கொடை**

அரசர்கள் தங்களிடம் இருக்கும் பொருட்களை வாரி வழங்குதல் இயல்பான ஒன்றாகும். ஆனால் தன்னிடம் பொருள் இல்லாத நிலையிலும் அவனைத் தேடிப் பரிசில் பெற வருவோருக்கு இல்லை என்று சொல்லும் சிறுமை அவனிடம் இல்லை. தன் மன்னனுக்குத் துணையாகப் போர்கள் பல செய்ததால் இவன் உடம்பை இரும்புக் கருவிகள் சுவைத்தன. அதனால் ஏற்பட்ட புண்கள் ஆறி விழுப்புண் ஆகிய வடுக்கள் உடம்பில் அதிகமாக உள்ளன. ஆதலால் கொடை வண்மைக்கு அவன் நண்பன் என்றும், பாணர் பசிக்குப் பகைவன் என்றும் ஆசிரியர் புகழ்வதாக,

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
'இல்' என மறுக்கும் சிறுமையும் இலனே;
இறை உறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து, (புறம்.180)

இப்பாடலில் கூறியுள்ளார். பாணர்கள் அவனிடம் பொருள் வேண்டும் போது, அவன் வேறொருவரிடம் கொல்லனிடம் சென்று வாளைக் கூர்மையாக்க வேண்டுவான். ஏனெனில், போரில் வென்று அதனில் ஈட்டிய பொருளைத் தன்னை நாடி வருவோர்க்குக் கொடுப்பதற்காக என்று குறுநில மன்னனான ஈர்ந்தூர் கிழான் தோயனின் கொடைத்தன்மையைப் பாணனின் பசியோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

**சொல் வழுவாத நிலை**

வேந்தர்கள் தங்களிடம் பொருள் வேண்டி வருவோர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுக்க வேண்டும். அவ்வாறு தன்னிடம் பொருள் இரந்து வருவோரிடம் எப்படி இருக்க வேண்டுமெனில், அவர்களின் முகக் குறிப்பாலேயே உணர்ந்து இரவலர் வறுமையைத் தீர்க்க வல்லவராய் இருக்க வேண்டும் என்பதை,

"நிலம் பெயரினும், நின் சொல் பெயரல
……………………………………………

*முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்*
*இன்மை தீர்த்தல் வன்மையானே''* *(புறம்.3)*

*தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் வல்லமை படைத்தவன் பாண்டியன் பெரும் பெயர் வழுதி என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. நிலமே பிறழ்ந்து பெயர நேர்ந்தாலும், வழுதியினுடைய ஆணை வழுவாமல் தன்னிடம் வருவோர்க்குப் பொருள் கொடுக்கும் வள்ளல் தன்மை கொண்டவன் என்று இரும்பிடத்தலையார் கூறுகிறார்.*

**தீக்கடைக் கோல் போன்றவன்**

*அதியமான் நெடுமான் அஞ்சி வீட்டு இறைப்பில் செருகப்பட்ட தீக்கடைக் கோல் போன்றவன், அவன் தன் ஆற்றல் வெளியே தோன்றாது இருக்கவும் இருப்பான்; தன் ஆற்றல் வெளிப்படத் தோன்ற வேண்டிய பொழுதில், தீக்கடைக் கோலால் கடையப்பட்ட சுடர்த்தீப் போல வெளிப்படத் தோன்றவும் செய்வான் என்பதை,*

*''நெடுமான் அஞ்சி*
*இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போல,*
*தோன்றாது இருக்கவும் வல்லன், மற்றதன்*
*கான்றுபடு கனைஎரி போல,*
*தோன்றவும் வல்லன்தான் தோன்றுங்காலே''* *(புறம்.315)*

*அடக்கமாக இருக்க வேண்டிய இடத்தில் அடக்கமாகவும், வீரத்தை வெளிப்படுத்த வேண்டிய இடத்தில் அதனை வெளிப்படுத்தவும் வேண்டும். அஞ்சியின் சினம் ஆறிய தன்மைக்கும் வெளிப்பட்ட தன்மைக்கும் தீக்கடைக் கோலை உவமையாக ஔவையார் கையாண்டிருப்பது சிறப்பிற்குறியதாகும்.*

**வறுமை இருளைப் போக்க வந்தவன்**

*பெரிதும் குளிர் காலமாகிய மாசி மாதம் வந்தது. இம்மாதத்தில் பகல் நேரம் குறுகியும், இரவு நேரம் நீண்டும் காணப்படும். இந்த காலத்தில் பனி படர்ந்த காட்டு வழியில் செல்லும் யாழிசைப் பாணன் மகிழும் வண்ணம் இருளைச் சீய்த்து ஒளியைப் பரப்பிக் கொண்டு கதிரவன் கிழக்குத் திசையில் தோன்றுவது போல சேரலாதன் தோன்றினான் என்பதை,*

*''பகல் நீடு ஆகாது, இரவுப்பொழுது பெருக*
*மாசி நின்ற மா கூர் திங்கள்,*
*புல் இருள் விடிய, புலம்பு சேண் அகல,*
*பாய் இருள் நீங்க, பல் கதிர் பரப்ப,*
*ஞாயிறு குணமுதல் தோன்றியா அங்கு,''* *(பதிற்று.59)*

*உலகில் பரவியுள்ள இருளை விரட்டப் பல்லாயிரம் கதிர்க் கற்றைகளை வானில் பரப்பிய வண்ணம் கீழ்த்திசையிலே கதிரவன் உதித்ததைப் போல், இரந்து உண்டு வாழ்க்கை நடத்தும் சிறுகுடி மக்களை பெருகிய வளத்துடன் வாழச் செய்வதற்கென்றே சேரலாதன் தோன்றியதாக உவமைப்படுத்தி உள்ளதை இப்பாடல் விளக்குகிறது.*

**திருமாவளவன் ஆற்றல்**

*சங்க காலத்து அரசர்கள் அனைவரும் பெரும்பாலும் வலிமை படைத்தவர்களாகவே இருந்தனர். ஆகவே அவர்களின் ஆற்றலை இயற்கைப் படைப்புகளோடு உவமையாகக் கூறிப் பாடுவதை இலக்கியங்களில் நாம் காணலாம். திருமாவளவன் தெய்வத்தன்மை உடையவன் ஆதலின், மலைகளை எல்லாம் அகழ்தலைச் செய்வான் என்றும், கடல்களை எல்லாம் தூர்த்தலைச் செய்வான் என்றும், தேவர் உலகத்தை மண்ணில் விழச் செய்வான் என்றும், காற்றை இயங்காமல் விலக்குவான் என்றும், உலகத்தவர் பாராட்டும்படி தான் கருதிய துறைகள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளதை,*

*''மருங்கு 'அற'*
*மலை அகழ்க்குவனே; கடல் தூர்க்குவனே;*

*வான் வீழ்க்குவனே; வளி மாற்றுவன் என, "   (பட்டின.270-272)*

*'மலை அகழ்க்குவன், கடல் தூர்க்குவன்' என்னும் தொடர்கள் திருமாவளவனின் வீரத்திற்கு உவமைகளாக வந்துள்ளதைக் காணலாம். தொல்காப்பியர் கூறுவதுபோல,*

*"உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு" (தொல்.புறத்.12) என்னும் புறத்திணையின் அடிப்படையில் இப்பாடல் பயின்று வருவதைக் காணலாம்.*

**முடிவுரை**

*அகத்தில் தலைவனைப் பற்றியப் பாடல்களில் அவனின் தகாத ஒழுக்கத்தை முன்னிறுத்தி (நீர்நாய், எருமை) உவமை கூறியுள்ளதையும், புறத்தில் தலைவன் போர்க்களத்தில் புரிகின்ற வீரத்திற்கு யானை, குதிரை போன்ற விலங்குகளுடன் ஒப்பிட்டு உவமை கூறியுள்ளதையும் அறிய முடிகின்றது. மேலும், மன்னனின் கொடைத்திறன், ஆற்றல், போன்றவையும் உவமை கூறப்பட்டுள்ளன. இதே போன்று பரிசில் பெற வருவோரும், பரிசில் பெற்றுத் திரும்புவோரும் வேந்தர்களைப் பற்றிய நற்குணங்களைக் கூறுவதைக் கேட்ட, மன்னர்களைக் காண வரும் புலவர்களும், பாணர்களும் அதற்கேற்ப சிறந்த உவமைகளைக் கொண்டு பாடியுள்ளதை அறிய முடிகிறது. இங்கு கூறப்பட்டுள்ள பாடல்கள் அனைத்தும் தலைவனின் செயல்களைப் போற்றும் விதமாகவே அமைகின்றன.*

**அடிக்குறிப்பு**


*1 .ஆக்ஸ்போர்டு அகராதி*

*2.தற்காலத் தமிழ் அகராதி*

*3.தொல்காப்பியம்*

*4.புறநானூறு*

*5.பட்டினப்பாலை*

*6.பதிற்றுப்பத்து*

*7. மு.வ. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை*

*8. பேரா.தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு*